முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.10.2018, வெள்ளிக்கிழமை

1. **ஜீவகாருண்ய வளர்ச்சி வேண்டி**
   **சிவராஜ யோகியாக வந்தநல்**
   **அவதார ஞானியே அரங்கா**
   **அண்ணலே உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குவலயத்தில் **விளம்பி தரிவை திங்கள்**
   **தெரியவே இருபானாற் திகதி புகர் வாரம்**
   **(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 26ம் நாள் 12.10.2018, வெள்ளிக்கிழமை)**
   **தேசிகனுக்கு புலிப்பாணிச்சித்தர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உயர்வான அன்னதான நெறியுடன்
   ஞானசபை அமைத்து மக்களை
   ஞான வழி நடத்தும் அரங்கனே
4. அரங்கனே கலியுக மாதவசி
   அரங்கனே அழியாமை தரும் ஞானி
   வரங்கள் பெற்று உலகோர் சிறக்க
   வழிகாட்டி அருளும் குருவின் அருளை
5. அருளை பெறுகின்ற உலகோர்
   அழியாமை அடைவது உறுதி
   அருளை அடைகின்ற உலகோர்
   ஆன்ம பலமுடன் சகல வளமும் பெற்றுமே
6. வளமும் மனோ பலமும் தேகதிடமும்
   வரும் மக்கள் அடைவர் என்பேன்
   காலமும் ஆயுள் பலமும் வெல்லும்
   கந்தவேலன் சக்திதனை அடைந்து
7. அடைந்துமே அரங்கன் தலைமையிலான
   ஆறுமுகன் ஆளுமை கொண்ட
   சோடையிலா ஞானயுகமாகும்
   சுத்த சைவநெறி ஏற்று வர
8. வருகவே மக்களிடை சாத்வீகம்
   வல்லமைபட நற்குணம் பரவி
   முருகன் வழிபாட்டிலும் வருக
   முழுமைபட ஞானவழி செயலாக மாறி

9. மாறியே தீதான மும்மலக் குற்றம்
மனமாயை பிற அல்லல்கள் வந்திடா
அறிவு தெளிவு திடம் உயர் குணம்
ஆக்கப்பூர்வமான சிந்தைகளை பெருக்கி

10. பெருக்கியே தானதரும நோக்கமுடன்
பெருமளவில் தயவு நிலை உருவாகி
வருமுலகில் மக்களிடை எக்காலமும்
வள்ளல் கண்ட ஜீவகாருண்யம் மலர்ந்து

11. மலர்ந்து ஞானிகளின் துணைபட
மக்களிடை ஞான ஆட்சி
மலர்ந்திடும் சடுதி கலியுகம் தன்னில்
மொழிந்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் புலிப்பாணிச் சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகினில் தருமத்தை பெருக்கிடவும் உலக உயிர்களின்பால், மக்கள் கருணைக் கொண்டு ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், உலகினில் ஜீவகாருண்யமாகிய பரோபகார செயலினை வளர்த்திட வள்ளல் பெருமானாரின் வழித்தோன்றலாக முருகப்பெருமானின் அவதாரமாக சிவராஜயோகியாக உலகினில் வந்துதித்து உலக மக்களைக் காத்து, அவர்களுக்குள் ஜீவதயவை வளர்த்து அறியாமை நீக்கி ஞானம்தனை வளர்க்கும் மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அண்ணலே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 26ம் நாள் 12.10.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே புலிப்பாணிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புலிப்பாணிச்சித்தர்.

உலகை காத்து வழிநடத்திடவே உலக மக்களுக்கு எல்லா நன்மைகளையும் தந்தருளும் உயர்வான நெறியாம் அன்னதான நெறியுடன் ஞானிகளை வணங்குகின்ற ஞானசபையாய், ஏழாம் படை வீடாய் துறையூர் ஓங்காரக்குடிலினை அமைத்து ஆங்கே ஞானவழிபாடுகளைச் செய்து உலகை வழிநடத்தி வருகின்றார் ஆறுமுக அரங்கமகா தேசிகனார்.

அன்னதான நெறிமூலம் ஞானபூஜைகள் செய்து உலகை வழிநடத்துகின்ற அரங்கமகா தேசிகனே இந்த கலியுகத்தினை மாற்றிட வந்திட்ட மகா தவசியாவார். ஆறுமுக அரங்கனே அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை தரவல்ல மகா ஞானி. தம்மை நாடி வரும் மக்களுக்கு தாயன்புடன் வேண்டும் வரங்களை அளித்து அவர்களுக்கு வழிகாட்டி அவர்களை வழிநடத்தி அருள் செய்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானகுருவின் அருளை பெறுகின்ற உலக மக்கள் எல்லாம் மரணமிலாப் பெருவாழ்வை பெறுவது உறுதியப்பா. அரங்கனின் அருளைப் பெறுகின்றவர்கள் ஆன்மபலம் பெறுவதுடன் சகலவளங்களையும் பெற்று சிறப்படைவார்கள். மனோபலமும் தேகதிடமும் பெற்று, நீடிய ஆயுளையும் பெற்று சிறப்படைவார்கள். காலத்தை வெல்லும் உபாயம் அறிந்து நீடிய ஆயுளைப் பெற்று மரணம் வெல்லும் சக்தியான முருகப்பெருமான் அருளும் சக்தியையும் பெற்று மேன்மை அடைவர்.

முருகப்பெருமானிடத்து மக்களெல்லாம் சக்திகளை பெற்று ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தலைமையில் அமையும், முருகப்பெருமானே நேரில் தோன்றி ஆட்சி செய்கின்ற குற்றம் ஏதும் இல்லாத தூய உலகமான ஞானயுகமாக ஆகிடும் இவ்வுலகம்.

ஆறுமுக அரங்கன் கூறும் தூயநெறியான உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவை மேற்கொண்டு சுத்த சைவநெறியில் நடந்து வர, சைவநெறியில் நடக்கின்ற மக்களிடம் உள்ள தீயகுணங்கள் மறைந்து சாத்வீகமான வல்லமைமிக்க நற்குணங்கள் அதிகரித்திடும். அவர்கள் முருகப்பெருமானை தொடர்ந்து தவறாமல் மனம் உருகி வணங்கி வரவர, அவர்களது செயல்பாடுகள் மாறி நற்செயல்களாக ஆகி முழுமையான ஞானவழி செயல்களாக ஆகி அவர்களைப் பற்றியுள்ள தீமையான மும்மலக் குற்றம் விலகும். மனமாயையும் பிற துன்பங்களும் வந்திடாமல் தெளிந்த திடமான அறிவையும் பெற்று உயர்வான குணங்களை உடையவராய் மாறி தானதருமங்களைச் செய்து அவர்தம்முள் பெரும் தயவுநிலை உருவாகிடும்.

உலகோர் தருமசிந்தையும் தயவும் கொண்டு செயல்பட, உலகமெலாம் தயவு பெருகி உலக மக்களிடையே வள்ளல் ராமலிங்க சுவாமிகள் கண்ட ஞானவீட்டின் திறவு கோலான ஜீவகாருண்யம் மலர்ந்து ஞானிகளின் துணையுடன் மக்களிடையே உலகமெலாம் ஞான ஆட்சி கலியுகத்தினை மாற்றி விரைந்து உருவாகிடுமப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் புலிப்பாணிச்சித்தர்.

–சுபம்–